**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 459/2024**
**வழக்கு சாட்சி PW-4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | இந்திரா | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | சீனிப்பாண்டி | தொழில் | : | குடும்ப பொறுப்பு |
| கிராமம் | : | ஆழ்வார்க்குறிச்சி | வயது | : | 40 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of August 23rd, 2025.

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் ஆழ்வார்க்குறிச்சியில் குடியிருந்து வருகிறேன். நான் குடும்ப பொறுப்பு வகித்து வருகிறேன். சாட்சி மகேஷ்வரி என்னுடைய பக்கத்து வீட்டுக்காரர். எதிரியை எனக்கு தெரியும். 02.04.2023 அன்று மதியம் 03.00, 03.00 மணியளவில் நானும், சந்திராவும் முப்பிடாதி அம்மன்கோவில் அருகே பேசிக்கொண்டு நின்றோம். மகேஷ்வரியும், எதிரியும் அம்மன்கோவில் அருகே பேசிக்கொண்டு நின்றபோது வாக்குவாதம் ஏற்பட்டது. சத்தம் கேட்டு அவர்கள் பேசிக்கொண்டு நின்ற இடத்திற்கு வந்தோம். எதிரி அவருடைய முதுகுக்கு பின்னால் வைத்திருந்த அரிவாளை எடுத்து மகேஷ்வரியின் தோள்பட்டை, தலை மற்றும் உடம்பின் பல இடங்களில் வெட்டினார். இதனை பார்த்தவுடன் நான் பதற்றமடைந்தேன். எதிரியை நாங்கள் சத்தம் போட்டவுடன் எதிரி சென்று விட்டார். பின்னர், மகேஷ்வரியின் மகளுக்கு தகவல் சொன்னோம். அவர் மகேஷ்வரியை மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :

சம்பவயிடத்திற்கு அருகில் என்னுடைய வீடு உள்ளதா? என்றால் கொஞ்சம் தள்ளி உள்ளது. அம்மன்கோவிலின் அருகே வீடுகள் உள்ளது என்றால் சரிதான். அங்கு ஆட்கள் குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். போலீசார் விசாரணையில், சம்பவயிடத்திற்கு அருகேயுள்ள வீடுகளில் குடியிருக்கும் நபர்கள் சம்பவத்தை பார்த்தார்களா என்று நான் சொல்லவில்லை என்றால் சரிதான். கோவில் வளாகத்தில் ஒரு ஆலமரம் உள்ளது. நாங்கள் எதற்காக அந்த ஆலமரம் முன்னால் வந்தோம் என்று போலீசார் விசாரணையில் சொன்னேனா? என்றால் நாங்கள் சும்மா தான் பேசிக்கொண்டிருந்தோம். சந்திராவின் வீடு கோவில் அருகே இல்லை என்றால் சரிதான்.

கோவிலிருந்து 10 அடி தூரத்தில் தார் ரோடு உள்ளது. மகேஷ்வரி எந்த ரோட்டிலிருந்து வந்து கொண்டிருந்தார் என்று நான் பார்க்கவில்லை. நாங்கள் பேசிக்கொண்டிருக்கும்போது, எதிரி எப்போது வந்தார் என்று நான் பார்த்தேனா? என்றால் இல்லை. மகேஷ்வரிக்கு காயம்பட்ட போது, காயத்தை போய் பார்த்தேனா? என்றால் வெட்டும்போதே பார்த்தேன். மகேஷ்வரியின் உடம்பிலும், துணியிலும், தரையிலும் இரத்தம் பட்டது என்றால் சரிதான். மகேஷ்வரி மயக்கத்தில் இருந்தார். நான் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன். மகேஷ்வரியின் உடம்பில் ஏற்பட்ட காயத்திற்கு சந்திரா வைத்திருந்த துண்டை வாங்கி கட்டினோம்.

எதிரி மேற்கு பக்கமாக சென்றார். நான் இந்த விபரத்தை போலீசாரிடம் சொன்னேன். எதிரி, அவருடைய மனைவியை விட்டு பிரிந்து வாழ்ந்து வருகிறார் என்றால் அது எனக்கு தெரியாது. மகேஷ்வரிக்கு வேறு

நபர்களுடன் விரோதம் உள்ளது என்றால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. மகேஷ்வரிக்கு வேறு வகையில் வீட்டில் வைத்து காயம் ஏற்பட்டது என்றாலும், நான் பொய் சாட்சி சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> –

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.08.23 16:45:31 +0530

**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 459/2024**
**வழக்கு சாட்சி PW-5**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பவித்ரா | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | குமார் | தொழில் | : | டெய்லரிங் |
| கிராமம் | : | ஆழ்வார்க்குறிச்சி | வயது | : | 18 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of August 23rd, 2025.

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் ஆழ்வார்க்குறிச்சியில் குடியிருந்து வருகிறேன். நான் டெய்லரிங் வேலை பார்த்து வருகிறேன். சாட்சி மகேஷ்வரி என்னுடைய பக்கத்து வீட்டுக்காரர். எதிரியை எனக்கு தெரியும். மகேஷ்வரிக்கும், எதிரிக்கும் ஏற்கனவே இடப்பிரச்சனை இருந்தது. 02.04.2023 அன்று மதியம் 03.00, 03.30 மணியளவில் நானும், சந்திராவும், இந்திராவும் அம்மன்கோவில் அருகே பேசிக்கொண்டு நின்றோம். அப்போது, எதிரியும், மகேஷ்வரியும் அம்மன்கோவில் அருகே பேசிக்கொண்டு நின்றார்கள். அப்போது, "அம்மா, அப்பா" என்று மகேஷ்வரியின் சத்தம் கேட்டது. இந்திராவும், சந்திராவும் அங்கு பார்க்கச் சென்றார்கள். நான் பார்த்தபோது, மகேஷ்வரியின் தலையிலும், கழுத்திலும், கையிலும் காயம் இருந்தது. நான் அவருடைய மகளான முத்துகிருஷ்ணவேணிக்கு போய் தகவல் சொன்னேன். முத்துகிருஷ்ணவேணி மகேஷ்வரியை மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

நான் 10ம் வகுப்பு படித்துள்ளேன். நான் போலீசார் விசாரணையில் சந்திரா, இந்திராவுடன் பேசிக்கொண்டிருந்ததாக கூறியுள்ளேன். நான் எப்போது சம்பவயிடத்திற்கு வந்தேன் என்றும், இந்திரா, சந்திரா எப்போது அங்கு வந்தார்கள் என்றும் போலீசார் விசாரணையில் சொன்னேனா? என்றால் இல்லை. இந்திரா, சந்திரா எனக்கு உறவு இல்லை. அம்மன்கோவில் அருகே என்னுடைய வீடு உள்ளது. சம்பவம் நடந்தபோது, எனது வயது 17 இருக்கும். நான் இந்திரா, சந்திராவுடன் சம்பவநாளன்று பேசிக்கொண்டிருக்கவில்லை என்றால் சரியல்ல.

அம்மன் கோவிலில் ஒரு ஆலமரம் உள்ளது. தார் ரோட்டிலிருந்து கோவில் 4 அடி தூரத்தில் உள்ளது. காயம்பட்ட மகேஷ்வரி மண் ரோட்டில் போய்க்கொண்டிருந்தாரா? தார் ரோட்டில் போய்க்கொண்டிருந்தாரா? என்று நான் பார்க்கவில்லை. நான் சம்பவத்தை பார்க்கவில்லை என்றால் சரியல்ல. மகேஷ்வரி எனக்கு உறவினர் என்பதினால் நான் பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. மகேஷ்வரி எனக்கு உறவு இல்லை. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> –**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.08.23 16:46:01 +0530